
THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே**
**சகல ஞானத்தோடும் பரிபூரணமாக**
**வாசமாயிருப்பதாக** கொலோசெயர் 3:16



ஆகஸ்ட் 2009

மரம் 9
கனி 9

ஆசிரியர்
B. அர்ஜுனன்

## மோசே – Moses




- லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவன் - யாத்2:1,2
- மனைவி சிப்போராள் மற்றும் பிள்ளைகள் - யாத்4:20,25
- தன் மாமன் எத்திரோவின் ஆடுகளை மேய்த்தவன் - யாத்3:1
- விசுவாசத்தினாலே கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினவன் - எபி11:26
- தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தவன் - எபி3:2
- அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இரவும் பகலும் மலையில் இருந்தவன் - யாத்34:28
- கர்த்தரோடு முகமுகமாய்பேசினவன் - யாத்33:11
- ஜனங்களுக்காக கெஞ்சிப் பிரார்த்தனை செய்தவன் - யாத்32:13
- எலியாவோடும் இயேசுவோடும் அவர் எருசலேமிலே நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்தைக் குறித்து பேசினவன் - லூக்9:31
- மோசே மரிக்கிறபோது 120 வயதாயிருந்தான் - உபா34:7


# கிறிஸ்துவின் வசனம்

## வழங்கும்

## தொலைக்காட்சி நிகழ்ச்சி







தமிழன் *TV* யில் திங்கள் காலை 6.00 - 6.15

இமயம் *TV* யில் புதன் காலை 6.30 - 6.45

***ரேடியோ நிகழ்ச்சி***





இலங்கை ஆசிய சேவை *SW* 25 மற்றும் 41 மீட்டரில்

ஒவ்வொரு சனி மாலை 5.30 முதல் 5.45 மணி வரை

கேட்டு சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

**Website: www.thewordofchristindia.com**


"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15.

"The Churches Of Christ salute you" Romans 16:16


**Published by**

WORLD LITERATURE PUBLICATIONS

Post Box No. 5, Batlagundu - 624 202.

SOUTH INDIA.

# திவேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 9 ஆகஸ்ட் - 2009 கனி - 9


ஆசிரியருரை

## கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்கள்

## Ye Are The Epistle of Christ



உண்மை கிறிஸ்தவத்தை நாம் கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறவர்கள் மத்தியில் காணலாம். பரிசுத்த வேதாகமமும் அதையே போதிக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் அநேக நிருபங்களை புதிய ஏற்பாட்டு காலத்தில் எழுதியுள்ளார். அவர் கொரிந்து சபைக்கு எழுதிய நிருபத்தில், "எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே. ஏனெனில் நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது; அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது" என்றார் (2கொரி.3:2,3). பவுலுடைய ஊழியத்தில் அவரால் ஏற்படுத்தப்பட்ட சபைகள் அதிகம். ஆசியா முழுமைக்கும் கர்த்தருடைய ஊழியம் பவுல் மூலமாக பரவியிருந்தது. அவர் கர்த்தருடைய ஊழியத்திற்காக தம்மையே ஒப்புக்கொடுத்தவர். மூலமாய் ஏற்படுத்தப்பட்ட சபையாருக்கு நிருபங்களை எழுதும்போது எங்கள் நிருபம் நீங்கள்தானே என்கிறார். அப்படியானால் அவர்கள் கிறிஸ்துவின் நிருபமாயிருந்திருக்கிறார்கள். இன்றைக்கு ஒரு ஊழியக்காரனுக்கு அவன் மூலமாய் ஏற்படுத்தப்பட்ட சபையார் நிருபமாக இருக்கவேண்டும். அவர்களைப் புறஜாதியார் பார்க்கும்போது கிறிஸ்துவையும், அவருடைய உன்னதமான ஊழியங்களையும், அந்த ஊழியக்காரனுடைய வேலைகளையும் அவர்கள் மூலமாக பார்ப்பார்கள். இவ்விதமாக நாம் ஒவ்வொருவரும் நிருபங்களாக இருப்போமானால் மற்றவர்கள் நம்மிலுள்ள நற்காரியங்களை கண்டு உலகத்தில் உள்ள அனைவரும் தேவனுடைய பிள்ளைகளாக மாறக்கூடிய வாய்ப்பு

உண்டாகுமல்லவா? ஒரு விவசாயின் வேலைப்பாடுகள் அவனுடைய நிலத்திலே தெரியும். அதைப்போல பவுலுடைய வேலைப்பாடுகள் அவனால் ஏற்படுத்தப்பட்ட சபைகள் மூலம் தெரியவந்தது. ஆகையால் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய நிருபமாயிருக்கிறீர்கள் என்று எழுதுகிறார்.

மேலும் "அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும்" என்கிறார் (1கொரி.3:12-15). எந்த ஒரு ஊழியக்காரனாயிருந்தாலும் அவனுடைய ஊழியம் பரிசோதிக்கப்படும். அவன் சரியானபடி அஸ்திபாரமிட்டு மூலைக்கல்லாகிய கிறிஸ்துவின் மீதும், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களின் மீதும், புத்தியுள்ள மனுஷனைப்போல கன்மலையின் மீதும் கட்டியிருப்பானேயானால் அது நிலைக்கும். அதிலே இணைக்கப்பட்டவர்களும் நிருபங்களாக இருந்து, கிறிஸ்துவின் வாசனையை வெளிப்படுத்துகிறவர்களாகவும், எல்லோருக்கும் மாதிரியாகவும் இருப்பார்கள். அப்படியில்லாத பட்சத்தில் அவர்கள் பதரைப்போல பறந்து போய்விடுவார்கள். ஆகையால்தான் கர்த்தர் சீமோனைப் பார்த்து சொல்லும்போது; "சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்" (லூக்.22:31,32). கோதுமைக்கு முன்பாக பதர் எம்மாத்திரம். நீங்கள் கோதுமை மணிகளாக இருக்கப்பிரயாசப்படுங்கள்.

மேலும் பவுல் சொல்லும்போது; "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" என்கிறார் (2கொரி.3:18). ஒரு உண்மை கிறிஸ்தவன் அவரைப்போல மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறான். ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின என்று படிக்கிறோம். வெறும் பெயர் மாற்றம் மட்டும்போதாது, ஜீவியம் மாற்றப்பட வேண்டும். நாமும் அவரைப்போல மாறவேண்டும். பவுல் கர்த்தருடைய அச்சடையாளங்களை தன் சரீரத்திலே தரித்துக்கொண்டிருப்பதாக எழுதுகிறார் கலா.6:17. உருவத்திலே அல்ல. ஆவிக்குரியவராக, ஆவிக்குரிய கனிகள் நிறைந்தவராக கிறிஸ்துவைப்போல நன்மைசெய்கிறவராக கர்த்தருடைய

அச்சடையாளங்களைத் தரித்துக்கொண்டார். பொதுவாக மேலை நாட்டு கலாசாரத்தை எல்லோரும் விரும்புகிறார்கள். ஆகையால் அவர்களைப்போல உடை அணிந்து கொள்ளவும் உணவு பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ளவும் விரும்புகிறார்கள். ஆனால் பவுல் கர்த்தருடைய அச்சடையளாங்களை தரித்துக்கொண்டார் என காண்கிறோம். நாம் ஒவ்வொருவரும் பரிசுத்த வேதாகமத்தின் துணைகொண்டு கர்த்தருடைய சாயலை அணிந்து கொள்ள முடியும். நீங்கள் அவ்விதமாக மாறும்போது நிருபங்களாகிறீர்கள்.

2கொரி.3:3-ன் பிற்பகுதியில் அது மையினாலல்ல ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும் என்று எழுதுகிறார். அப்படியானால் மையினால் அநேக நிருபங்களை ஆவியானவருடைய உதவியோடுகூட எழுதின பவுல் இங்கு அந்த நிருபம் நீங்கள்தானே என்பதால், ஒவ்வொருவரும் தம்மைப்போல மாறவேண்டுமென்ற எண்ணம் உடையவராயிருந்தார். ஆகையால் தான் பிலேமோனுக்கு எழுதும்போது; "என் உள்ளம்போலிருக்கிற அவனை நீர் ஏற்றுக்கொள்ளும்" என்றும் "என்னை ஏற்றுக்கொள்வதுபோல அவனையும் ஏற்றுக்கொள்ளும் என்றும் எழுதுகிறார் (பிலே.12,17). அதைப்போல தீமோத்தேயுவின் விசுவாசத்தைப் பாராட்டும்போது, "அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்" என்கிறார் (2தீமோ.1:5). தீமோத்தேயுவின் குடும்பமே அவனுடைய பாட்டி துவங்கி, தாயார் மற்றும் தீமோத்தேயு வரை விசுவாச வீரர்களாக இருந்திருக்கிறார்கள் எனக் காண்கிறோம். அப்படியானால் அவர்கள் நிருபங்களாக திகழ்ந்திருக்கிறார்கள் அல்லவா! "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன்கொடுக்கிறவர் களாயிருக்கிறார்கள்" என்று விதை விதைக்கிற உவமையிலே கர்த்தர் சொல்லியிருக்கிறார் (லூக்.8:15). அந்தப்படியாக இந்த தீமோத்தேயுவின் குடும்பம் முழுவதும் விசுவாச விஷயத்தில் கர்த்தருடைய வார்த்தையை இருதயத்தில் எழுதினவர்களாக இருந்திருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரும் அவர்களுடைய விசுவாசத்தை குறித்து வேதாகமத்தில் நன்கு வெளிப்படுத்துகிறார். நாமும் எழுத்தோடு நின்று விடாமல், நிருபங்களாக இருந்து செயல்படுவோம். "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது" (2தீமோ.3:16,17).

மேலும், கற்பலகைகளிலல்ல என்று எழுதுகிறார். அப்படியானால் நாம் அறிந்திருக்கிறபடி பழைய ஏற்பாடு கற்பலகைகளில் எழுதப்பட்டதாயிருந்தது. அதை

இஸ்ரவேலருக்கு பிதாவாகிய தேவன் மோசேயின் மூலம் கொடுத்தார். ஆனால் புது உடன்படிக்கை அப்படியல்ல என்பதை பவுல் இங்கு விளக்குகிறார். அது சதையினால் எழுதப்படுகிறது. ஒரு தேவ மனிதன் கர்த்தருடைய வசனத்தைப் பிரசங்கிக்கும்போது கேட்கக்கூடிய அந்த மனுஷனுடைய இருதயத்தில் அந்த வசனம் எழுதப்படுகிறது. பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்ட ஜனங்கள் "இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்றார்கள்" (அப்.2:37). இருதயத்திலே குத்தப்பட்டபடியினாலே அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் ஞானஸ்நானம் பெற்று கர்த்தரால் சபையிலே சேர்க்கப்பட்டார்கள். இந்த உடன்படிக்கை ஆவிக்குரியது. "புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது" (2கொரி.3:6). மேலும், "இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்" என்கிறார் பவுல் (ரோ.7:6). விடுதலையாக்கப்பட்ட நாம் பழமையான எழுத்துக்கு திரும்பாமல் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டு பண்ணின கர்த்தருடைய வழியே சென்று நாம் நிருபங்களாக மாறவேண்டும்.


அநேக நிருபங்களை எழுதின பவுல் நீங்களே அந்த நிருபம் என்று எழுத பல காரணங்கள் உண்டு. ஒன்று இன்றைய கால கட்டத்திற்கு பார்க்கும்போது நிருபங்களை எடுத்து பிரசங்கிக்க ஒரு பிரசங்கியார் தேவை. அறுவடை மிகுதி ஆனால் ஆளோ இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாமே நிருபங்களாக செயல்பட்டால் ஒவ்வொரு நாளும் நாம் நடக்கும்போதும், உட்காரும்போதும், பேசும்போதும், ஒருவேலையைச் செய்யும்போதும் நம்மூலமாக கிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டுக்கொண்டே இருக்கும். இதை நீங்கள் என்றாவது சிந்தித்ததுண்டா? இன்றைக்கு கிறிஸ்துவையும் அவருடைய சுத்த சுவிசேஷத்தையும் நம்மிலே அநேகர் கண்டு படிக்கவேண்டும். அப்படியானால் நாம் செய்யவேண்டுவதென்ன? நாம் நிருபங்களாக மாறவேண்டும். மாறுவீர்களா?

பவுல் கொரிந்துசபைக்கு எழுதும்போது "எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே" என்கிறார் (2கொரி.3:2). நீங்கள் உங்களுடைய சபையிலும், சமுதாயத்திலும் சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற கிறிஸ்துவின் நிருபங்களாக இருக்கிறீர்களா? அப்படியில்லை என்றால் இன்றே நிருபங்களாக செயல்பட துவங்குங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# கிறிஸ்துவுக்குள்

## IN CHRIST

*J.C.Choate*



வேதாகமம் நாம் பாவமற்றவர்களாக சரீரப்பிரகாரமாகப் பிறந்திருக்கிறோம் என்று போதிக்கிறது. நாம் பரிசுத்தமுள்ளவர்களும், கபடற்றவர்களும், காக்கப்பட்டவர்களுமாக இருக்கிறோம். ஆனால் நாம் வயது வந்தவர்களாக, பொறுப்புடைய வயதை அடைந்திருக்கையில், நல்லது கெட்டதை அறிந்து, இவ்வாறாக பாவிகளாக மாறி (ரோம.3:23), நாம் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கும்படிக்கு இப்போது கட்டாயமாக மனந்திரும்பி சிறு குழந்தைகளைப் போல மாறவேண்டியவர்களாயிருக்கிறோம் (மத்.18:3).

பாவிகளாகிய நாம் இரட்சிக்கப்படவேண்டியது அவசியம் ஏனென்றால் நாம் தேவனுடைய கட்டளையை மீறினவர்களாயிருக்கிறோம் (1யோவா.3:4). பவுல் நமக்கு "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ ...... நித்தியஜீவன்" (ரோம.6:30) என்று நினைப்பூட்டுகின்றான்.

ஆனால் நாம் எப்படி பாவத்திற்கும் மரணத்திற்கும் தப்பித்துக் கொள்ளமுடியும்? நாம் எவ்வாறு மன்னிக்கப்பட்டு, மீட்கப்பட்டு, இரட்சிப்பின் நிலைமைக்கு மாற்றப்பட முடியும்? நாம் விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுவோமானால் கிறிஸ்துதாமே நம்மை இரட்சிப்பார் என சொல்கிறார் (மாற்.16:16). பேதுரு திரளான ஜனக்கூட்டத்திற்கு பிரசங்கித்தபோது, அவர்கள் விசுவாசிகளாகி, தாங்கள் செய்யவேண்டியது என்னவென்று அறிய விரும்பினார்கள். அவன் அவர்களிடத்தில் அவர்கள் மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றான் (அப்.2:38). இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டார் (அப்.2:47) என அறிவுறுத்தப்படுகிறோம்.

நம்மை இவ்வுலகத்திலிருந்து விடுவித்து கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபைக்குள்ளும் கொண்டு செல்லுகிறது ஞானஸ்நானம். இதுவே நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் கடைசி படியாகும் தேவனிலும், கிறிஸ்துவிலும் விசுவாசத்தின் மூலமும் நமது பாவங்களிலிருந்து மனந்திரும்புவதின் மூலமும், கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று நமது விசுவாசத்தினால் அறிக்கையிடுவதின் மூலம் இது நடைபெறவில்லையென்றால் ஞானஸ்நானத்தினால் மட்டும் ஒன்றும்

பிரயோஜனமில்லை, நிச்சயமாக, இது நமக்கு ஒன்றும் செய்யாது. அப்புறம் ஞானஸ்நானப்படுத்தப்படுகையில் நம்முடைய பாவங்கள் கழுவப்படும் பொருட்டு தண்ணீருக்குள் அடக்கம் செய்யப்பட்டு, கர்த்தருடைய கற்பனைகளை நிறைவேற்றுவதுடன் ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கிறது என அறிவுறுத்தப்படுகிறோம் (பேது.3:21). தண்ணீர் தானே நம்மை இரட்சிக்கிறதில்லை ஆனால் நாம் கிறிஸ்துவின் சித்தப்படி ஞானஸ்நானம் பெற்றிருக்கிறபடியால் கிறிஸ்து நம்மை இரட்சிக்கிறார். 1பேதுரு3:21-ல் பேதுரு கூறுகிறபடி ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், அல்லது ஸ்நானம்பண்ணுவதற்காக இல்லாமல் தேவனைப்பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கையாயிருக்கிறது.

ஒருவன், தேவன், தன்னை செய்யும்படி கேட்டுக்கொண்டதைச் செய்யாமலிருக்கையில் தேவனுக்கு முன்பாக அவன் எவ்வாறு நல் மனசாட்சியினைக் கொண்டவனாயிருக்க முடியும்? என வினா எழும்புகிறது. நிச்சயமாக இது இயலாது, எனவே தான் தன்னுடைய பாவத்திற்காக மனந்திரும்புகின்ற விசுவாசியே ஞானஸ்நானம் பெறவேண்டியது அவசியமாயிருக்கிறது.

இன்னொரு வழியில் இதை ஆராய்கையில்: ஒருவன் வசனத்தின்படி ஞானஸ்நானம் பெறுகையில் தண்ணீருக்குள் அடக்கம்பண்ணப்பட்டு, புதிய ஜீவியம் ஜீவிக்கும்படி தண்ணீரிலிருந்து வெளியே கொண்டுவரப்படுகிறான் (ரோம.6:3,4) அவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் புதிய பிறப்பினை அனுபவத்து, ஆவியிலே மறுபடியும் பிறந்தவனாயிருக்கிறான் (யோவா.3:3-5). பவுல் இதை "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2கொரி.5:17) என விளக்குகிறான்.

இரட்சிப்பையும் புதுச்சிருஷ்டியாய் இருப்பதையும் கொண்டிருப்பதற்கு, ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்கவேண்டும் மேலும் அதுவே கிறிஸ்துவுக்குள் பிரவேசிப்பதற்கு நீதியான ஒரே வழியாய் இருக்கிறது. அப்போஸ்தலன் பவுல், "கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (ரோம.6:3,4) என்றான்.

பவுல், 2கொரிந்தியர்5:17-ல் சொன்னது என்னவென்றால், புதிய சிருஷ்டியாயிருப்பதன் விளைவு புதிய ஜீவியம் ஜீவிப்பது அல்லது **கிறிஸ்துவுக்குள்** புதிய ஜனமாயிருப்பது என்பதாகும். மறுபடியும் அவன், "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே.

ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" (கலா.3:26,27) என்றான்.

உதாரணமாக, ஒருவன் ஒரு சட்டையை அணிகிறபோது, அவன் சட்டைக்குள்ளிருக்கிறானா அல்லது சட்டைக்கு வெளியே இருக்கிறானா? நிச்சயமாக அவன் சட்டைக்குள்தான் இருக்கிறான். அவ்வாறே ஒருவன் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறபோது, அவன் கிறிஸ்துவுக்குள் இருக்கிறான். வெளியே அல்ல. இதன் இன்னொரு அர்த்தம் ஒருவன் கிறிஸ்துவுக்குள் **தேவனுடைய ஒரு குழந்தையாக இருக்கிறான்,** கிறிஸ்துவுக்கு வெளியே அல்ல.

ஒரு குறிப்பிட்ட நிலையில் ஒரு சமயத்தில் இரட்சிக்கப்பட்டு, பிறகு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டோம் எனக் கூறுகிறவர்கள் கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது கிறிஸ்து இன்றி இரட்சிக்கப்பட்டவர்களாக இருப்பர். இது எவ்வாறு கூடும்? இரட்சிக்கப்படும்படிக்கு ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்கவேண்டும், அது கிறிஸ்துவுக்குள் ஒருவனை கொண்டுசெல்லும் ஞானஸ்நானம் என வேதவாக்கியங்கள் போதித்தால், ஞானஸ்நானத்திற்கு முன்பாக ஒருவன் இரட்சிக்கப்படுவது என்பது இயலாததாயிருக்கும்.

மீண்டும், பவுல் 1கொரிந்தியர்12:13-ல் ஒரே சரீரத்திற்குள் நாம் ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம் என்கிறான், மேலும் கொலோசெயர்1:18-ல் சரீரமே சபை என்கிறான். எபேசியர்1:22,23,-ல் சபை சரீரமாயிருக்கிறது எனக்காட்டுகிறான் மேலும் கடைசியாக எபேசியர்4:4-ல் ஒரே ஒரு சரீரம் எனக்குறிப்பிடுகிறான்.

ஆனால் ஒரே சரீரமே சபையானால் அதன் அர்த்தம் ஒரே சபை மாத்திரமே உண்டு என்பதாகும், மேலும் நாம் அந்த சரீரத்திற்குள்ளாக அல்லது சபைக்குள்ளாக **ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருந்தால்**, பிறகு சபைக்குள் பிரவேசிப்பதற்கு ஒரே வழி மட்டுமே உள்ளது: அது ஞானஸ்நானம் பெற்றிருப்பதன் மூலமே! இது எல்லாம் மிகவும் நியாயமானது!

அனைத்து கருத்துக்களையும் ஒன்றிணைக்கையில், நாம் ஞானஸ்நானத்தில் கர்த்தருக்குக் கீழ்ப்படிகையில், நாம் கிறிஸ்துவுக்குள் மேலும் அவருடைய சபைக்குள் பிரவேசிக்கிறோம், ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கின்ற அதே வேளையில் கிறிஸ்து நம்மை தம்முடைய சபையில் சேர்க்கிறார்.

சரீரப்பிரகாரமான உறவில், அதாவது, ஒரு முறை சரீரப்பிரகாரமான ஒரு குடும்பத்தில் நாம் பிறந்திருக்கையில், **நாம் அதில் பிறவாதவர்கள் போல் இருக்கமுடியாது**. நாம் நமது குடும்பத்தின் விசுவாசமிகுந்தவராகவும், வேலையில் கருத்துள்ள அங்கத்தினனாகவும் அதனுடைய பலன்களைப் பெறுகிற்வர்களாக அல்லது ஒருவேளை நாம் வாரிசுரிமையை இழக்கின்ற வழியில் வாழ்கிறவர்களாயிருக்கலாம். ஆனால் நாம் எப்போதும் நம்முடைய தகப்பனுக்கும் தாயுக்கும் மகன் அல்லது மகளாக இருப்போம்.

இதே தான் உண்மையான ஆவிக்குரிய ரீதியிலுமுள்ளது. ஒரு முறை நாம் கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபை அல்லது குடும்பத்திற்குள் பிரவேசித்து, எப்போதும் நாம் கிறிஸ்துவுக்குள்ளிருப்போம். மேலும் நாம் எப்போதும் அந்த குடும்பத்தினுடைய அங்கத்தினர்களாக இருப்போம் ஆனால், நாம் விசுவாசமுள்ளவர்களாகவோ விசுவாசமில்லாதவர் களாகவோ இருக்க இயலும். ஆனால் தேவனுடைய பிள்ளையாக இருந்து, மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருக்கையில், கர்த்தர் நமக்கு ஜீவகிரீடத்தைக் கொடுப்பதாக வாக்களித் திருக்கிறார் (வெளி.2:10).

நாம் விசுவாசமற்றவர்களாயிருந்தோமானால் குடும்ப பிராந்திய சபையின் மூலம் இவ்வுலகில் ஒருவேளை நட்புறவு கொள்ளாதவர்களாக இருந்து விட நேரிடும். கடைசியாக நாம் மனந்திரும்பாவிட்டால் நித்திய நித்தியமாக இழந்தவர்களாகி விடுவோம் (மத்.25:46). நாம் நம்முடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கர்த்தரிடத்தில் திரும்புவோமானால், கர்த்தருக்குச் சொந்தமானவர்களுக்கு வரக்கூடிய பலன்களை மீண்டும் பெறுவோம். இந்த ஆவிக்குரிய குடும்ப உறவினை நன்றாகப் புரிந்து கொள்ளும்படிக்கு மனந்திரும்பிய மைந்தனின் கதையை லூக்கா 15-ல் வாசித்துப் பாருங்கள்.

நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா? நீங்கள் அவருடைய சபை அங்கத்தினராயிருக்கிறீர்களா? நீங்கள் தேவனுடைய விசுவாசமிக்க பிள்ளையாயிருக்கிறீர்களா? இல்லையென்றால், இது துக்ககரமான உண்மை, நீங்கள் இழந்துபோன நிலைமையிலிருக்கிறீர்கள். தயவுசெய்து அதிக தாமதம் ஏற்படும் முன் கர்த்தரிடம் வந்து சேரும்படி அவருடைய அழைப்பிற்குச் செவிசாயுங்கள்.

## பொது அறிவுச் சோதனை

1. பாலின் நிறம் வெண்மையாக இருக்க காரணம் என்ன?
   அ)கரோடின் ஆ)கேசின் இ)ரெனின்
2. எவரெஸ்ட் சிகரத்தை சென்றடைந்த முதல் பெண்மணி யார்?
   அ)விஜயலட்சுமி ஆ)ஜுங்கோ தபேய் இ)எஸ்தர்
3. உலகில் முதன் முதலாக பெண் வீராங்கனைகளை கொண்டு படை உருவாக்கிய நாடு எது?
   அ)நியூசிலாந்து ஆ)தமிழ்நாடு இ)ஸ்காட்லாந்து
4. செல்களை ஆராயும் அறிவியல் பிரிவின் பெயர் என்ன?
   அ)சைடாலஜி ஆ)ஆர்ணித்தாலஜி இ)சைக்கலாஜி
5. மணியாடர் மூலம் பணம் அனுப்பும் முறையை ஏற்படுத்திய நாடு எது?
   அ)இந்தியா ஆ)அமெரிக்கா இ)பிரான்சு

விடைகள்: 1.கேசின் 2.ஜுங்கோ தபேய் 3.நியூசிலாந்து 4.சைடாலஜி 5.பிரான்சு


# அங்கே ஓர் ராஜ்யம்

## There is a Kingdom

பெண்கள் பகுதி

என் சிநேகிதியே, அங்கே ஓர் ராஜ்யம்
பகல் அல்லது இரவு
காணப்படாத இடம் அது
இடைவெளி தூரங்கள்
அளவிடப்படாத இடம் அது
உணர்ச்சிகளின் மையமாகிய எந்த இருதயமும் தனியாக நடக்க முடியாத
கண்ணீரால் இன்னொருவரின் கண்களை நிரப்புகிற
உனது துயரத்தின்
பாரம் நிறைந்த இடது அது
உனது சிரிப்பின் எதிரொலி
உதடுகளிலிருந்து வடிகிறது என்றென்றும் பிரியமே;
பிதாவினிடத்திற்கு
நீ தைரியமாய் கொண்டு செல்லும் ஒவ்வொரு கனவும்
வளர்கிறது இன்னொருவரின் இருதயத்திற்குள்
அந்த கரங்கள் பலத்துடன்
உதவுகிறது உனக்கு
தூரத்தில் இலக்குகளை நீ அடைவதைப் போல்;
வெற்றி அல்லது அழிவு இல்லா இடம் அது
காலத்தினால் நாசம் உருவாக்கப்படாத இடம் அது,
வறுமை அல்லது செல்வம்
அன்பின் மேன்மையை பாதிக்க முடியவில்லை
ஒருவர் மிகக் கெம்பீரமாக
சிந்தையில் வைத்துள்ள இடம் அது
ஆண்டுகள் அதிவேகமாய் பறக்கையில்
ஆழமான அழகுடன் தகதகவென பிரகாசிக்கிறது
இளமை முழுதும் கடந்து போகையில்
மலையின் மேலே இருக்கும்
இரு இருதயங்கள்
வரப்போகும் முடிவினை ஆராயலாம்
பிரியமே, அங்கே ஓர் ராஜ்யம்
ஒரு சிநேகிதியின் இருதயதுடிப்பினுள்.

-Betty Burton Choate



# ஐக்கியம் கொள்ள நால்வர்
## 4 Persons To Fellowship

*- Glory Arjunan*



அன்பு சகோதரிகளே, இந்த கடைசி நாட்களில் நம்முடைய ஐக்கியம், நம்முடைய சிநேகம், நம்முடைய நட்பு யாரோடு உள்ளது? உலகத்தோடிருக்குமானால், 'உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை' என வேதம் கூறுவதை சற்றே நாம் சிந்திக்க வேண்டியது அவசியம். ஆம் சாத்தான் உலகத்தின் பல காரியங்களின் மூலம் கூடுமானால் விசுவாசிகளைக் கூட விழுத்தள்ள எத்தனித்துக் கொண்டிருக்கிறான். சாத்தானின் தந்திரங்களை நாம் அறிந்தவர்களாய் நம்முடைய ஐக்கியம் பின் வரும் நால்வரோடு இருக்குமானால் நாம் இந்த உலகத்தை ஜெயிப்போம். யார் அந்த நால்வர்? பார்ப்போமா?

பிதாவாகிய தேவன்: பிதாவாகிய தேவனோடு நம்முடைய ஐக்கியம் இருக்குமானால் நம்மை நாசமாக்க பிசாசு கொண்டுவரும் தந்திரங்களை எளிதில் அறிந்துகொள்ளமுடியும். அநேக ஸ்திரீகள் பிசாசின் தந்திரங்களை அறிந்துகொள்ள இயலாதவர்களாக தேவையில்லாத உலகக் காரியங்களில் சிக்கிக் கொள்ளுகின்றனர். ஸ்திரீகளை பிசாசானவன் எளிதில் வஞ்சிக்கிறவனாக யிருக்கிறான். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட முதல் ஸ்திரீயாகிய ஏவாள் பிசாசினால் வஞ்சிக்கப்பட்டதை நாம் அறிவோம். அவள் வஞ்சிக்கப்படாமலிருக்கும்படிக்கே தேவன் ஏற்கனவே 'நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம் என எச்சரித்திருந்தார். தேவனுடைய எச்சரிப்பை அறிந்திருந்தும் ஏவாள் கீழ்ப்படியாமல் அக்கனியை பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள் அவனும் புசித்தான் (ஆதி.2;18; 3:1-6) இருவரும் பிசாசினால் வஞ்சிக்கப்பட்டு தேவனுடைய ஆசீர்வாதத்தை இழந்தனர். அன்பு சகோதரிகளே, இது நம்மெல்லோருக்கும் ஒரு படிப்பினையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நமது கீழ்ப்படியாமை நமக்கு மட்டும் பாதிப்பைக் கொண்டுவருவதில்லை, நம்மோடு சேர்ந்துள்ள அனைவருக்கும் பாதிப்பைக் கொண்டுவருகிறது. நம்முடைய ஐக்கியம் நம்பிதாவாகிய தேவனோடு இருக்குமானால் நம்மால் நிச்சயம் இப்பேர்பட்ட பிரச்சனைகளை ஜெயிக்கமுடியும். "நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமானவர் சொல்லுகிறார்; உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்" (ஏசா.57:15) என்கிறார். என்ன மகிழ்ச்சி! நொறுங்கிப்போன, வாழ்க்கையில் வேதனையையே அநுபவித்துவருகின்ற

ஒவ்வொருவரிடத்திலும வாசம் பண்ணுகிறேன் என்கிறார். இப்பேர்பட்ட தெய்வத்தை கொண்டிருக்கிற நாம் ஏன் உலகத்தாரோடு ஐக்கியம் கொள்ள வேண்டும்? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரங்களுக்கும் சம்பந்தமேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே (2கொரி.6:14-16) என்று தேவன் கூறுகிறார். கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய யோவானும் "...எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது" (1யோவா.1:3) என்றார். நாமும் கூட பிதாவாகிய தேவனோடு ஐக்கியம் கொள்வோமானால் அவர் நம்மோடு வாசம் பண்ணி நொறுங்குண்டு, பிரச்சனைகள், வேதனைகள் என பல உலகக்காரியங்களில் சிக்குண்டு தவிக்கும் நம்மை ஆறுதல்படுத்தி வழிநடத்துவதோடு கூட பிசாசின் கண்ணிகளுக்கும் நீங்கலாக்கி இரட்சிப்பார். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போம் (1யோவா.2;17).

தேவக்குமாரன்: தேவக்குமாரனோடு நம்முடைய ஐக்கியம் இருக்க வேண்டும். அவ்வாறு இருக்குமானால் நாம் ஆவிக்குரிய அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம். தேவக் குமாரனாகிய இயேசுகிறிஸ்து நம்நடுவில் இருப்பார், நம்மோடு வாசம் பண்ணுவார், நம்மோடு நிலைத்திருப்பார் எப்போது? இரண்டு பேராவது மூன்று பேராவது இயேசுவின் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவில் இயேசு இருப்பார் (மத்.19:20), அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளும்போது அவர் நம்மோடு வாசம்பண்ணுவார் (யோவா.14:23). மெய்யான திராட்சச் செடியாகிய இயேசுவில் நிலைத்திருக்கும்போது அவரும் நம்மோடு நிலைத்திருப்பார் (யோவா.16:1-8). இயேசுவோடு ஐக்கியம் கொள்ளவேண்டுமென்பது நம்முடைய தேவனின் அழைப்பாகவுமிருக்கிறது. இயேசுவோடு நாம் ஐக்கியமாயிருக்க வேண்டுமென பிதாவாகிய தேவன் நம்மை அழைக்கிறார். அன்பு சகோதரியே, உன் உற்றார் உறிவினர், நண்பர் போன்றோர் உங்களை ஏதோ ஒரு விசேஷத்திற்கு அழைத்தால் நீங்கள் சந்தோஷமாக, தவறாது கலந்து கொள்ள வேண்டுமென அழைப்பை ஏற்றுச் செல்லுகிறீர்கள். ஆனால் நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து எல்லாரைக் காட்டிலும் விசேஷித்தவர், நமக்காக தம் ஜீவனையே கொடுத்தவர், அவராலேயன்றி அருவருப்பான பாவத்திலிருந்து நம்மை யாராலும் விடுவிக்கமுடியாது, இப்படி எத்தனையோ நன்மைகளை நமக்கு செய்த தேவக் குமாரனாகிய இயேசுவோடு ஐக்கியங்கொள்ள வேண்டியது எத்தனை அவசியமாயிருக்கிறது! "தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்" (1கொரி.1:9). இந்த அழைப்பை அசட்டை செய்யலாமா? இயேசுவோடு நம்முடைய ஐக்கியம் இருக்குமானால் அவருடைய சிந்தையும் நமக்கிருக்கும். அவர்

நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்தது போல நாமும் நன்மை செய்கிறவர்களாயிருப்போம். அவர் அன்புள்ளவராயிருந்தது போல நாமும் அன்புள்ளவர்களாயிருப்போம். அவர் பிதாவின் சித்தம் செய்தது போல நாமும் பிதாவின் சித்தம் செய்வோம். அவர் பிசாசையும், உலகத்தையும் ஜெயித்தது போல நாமும் பிசாசையும், இவ்வுலகத்தையும் ஜெயிப்போம். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" (1யோவா.1:7). எனவே இயேசுவோடு ஐக்கியம் கொள்ளுவோம்.

தேவனுடைய ஆவி: தேவனுடைய ஆவியோடு நம்முடைய ஐக்கியம் இருக்கவேண்டும். அப்போது நாம் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர் களாயிருப்போம். "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" (ரோம.8:9). தேவனுடைய ஆவி நம்மில் வாசமாயிருந்தால் நாம் தேவனுடைய ஆலயமாயிருப்போம். "ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது, நீங்களே அந்த ஆலயம்" (1கொரி.4:16,17) என வேதம் கூறுகிறது. அன்பு சகோதரியே, நாம் எந்த விதத்தில் ஆலயமாகிய நம்மைக் கெடுத்துக்கொள்கிறோம்? "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிற தென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? அப்படியானால் நாம் நம்முடைய சரீரத்தை ஆவிக்கேற்றபடி அலங்கரித்து கொள்ளவேண்டும். நம்முடைய சரீரத்தில் உலகத்துக்கு ஒத்த வேஷத்தைத் தரித்துக்கொள்ளக் கூடாது. கிறிஸ்தவ ஸ்திரீகளில் அநேகர் தங்கள் சரீரங்களை உலகத்திற்கொத்தாற்போல அலங்கரித்துக் கொள்ளுகின்றனர். அநேகமாக இன்றைய சினிமா நடிகைகளையும் தங்களுக்கு மாதிரியாகக் கொண்டு அலங்கரித்துக் கொள்கின்றனர். ஆனால் வேதம் கூறுகிறது, "....தேவபக்தியுள்ளவர் களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்க வேண்டும்" (1தீமோ.2;10) என்று. தேவனுடைய ஆவி நம்மில் வாசம்பண்ணும்படி தேவனுடைய ஆவியின் ஐக்கியமும் நம்மோடுகூட இருக்கட்டும் (2கொரி.13:14). தேவனுடைய ஆவியோடு நம்முடைய ஐக்கியமிருக்குமானால் அவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தி இவ்வுலக அருவருப்புகளிலிருந்து நம்மைப் பாதுகாப்பார்.

கிறிஸ்தவர்கள்: கிறிஸ்தவர்களோடு நம்முடைய ஐக்கியம் காணப்படவேண்டும். ஆம் அன்பு சகோதரிகளே, இன்றைய நாட்களில் பிசாசு இவ்வுலகத்தாரின் மூலமாகவே நம்மை விழத்தள்ளும்படி மிகத் தீவிரமாக செயல்பட்டுவருகிறான். நாம் உலகத்தாரிடம் அதிகமாக ஐக்கியம் கொள்ளும்போது நமக்குள் உலகம் வந்துவிட வாய்ப்புகள் அதிகமுண்டு. அவர்களுடைய பழக்கவழக்கங்கள், கலாச்சாரங்கள், நடைகள், உடைகள் போன்ற அநேகக்


காரியங்கள் நம்மை மேற்கூறிய மூவரிடமிருந்து பிரித்துவிடும். இன்று கிறிஸ்தவர்களைப் பின்பற்றுகிறவர்களைக் காட்டிலும் கிறிஸ்தவர்கள் புறமார்க்கத்தாரையும் அவர்களுடைய நடவடிக்கைகளையும் பின்பற்றுகிறவர் களாகவே அதிகம் காணப்படுகின்றனர். ஏரேமியா 10:2 "புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக் கொள்ளாதிருங்கள்" என்று கூறுகிறது. முதல் நூற்றாண்டில் கிறிஸ்துவின் சுவிசேஷம் அதிகமாக பரம்பி மகிமைப்பட்டு ஆயிரமாயிரமாக சபைகளில் ஜனங்கள் சேர்க்கப்பட்டார்கள். அதற்குக் காரணம், அன்றைய கிறிஸ்தவர்களிடையே ஒருமனம் காணப்பட்டது. ஜெபத்தினாலும், வேண்டுதலிலும், உபதேசத்திலும், அப்பம்பிட்குதலிலும் தரித்திருந்தார்கள். ஆகவே தேவனும், இயேசுகிறிஸ்துவும், ஆவியானவரும் மகிமைப்படுத்தப்பட்டார்கள். "அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்" (அப்.1:14). மேலும் "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம்பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப்.2:42). நீங்கள் இவ்வாறு கிறிஸ்தவர்களோடு ஐக்கியங் கொண்டிருக்கிறீர்களா? உங்களுடைய குடும்பம் கிறிஸ்தவர்களோடு ஐக்கியங் கொண்டுள்ளதா? அநேக கிறிஸ்தவ ஸ்திரீகள் கிறிஸ்தவர்களோடு ஐக்கியங்கொள்வதைக் காட்டிலும் புறஜாதிகளோடு தான் அதிகமாக ஐக்கியங் கொண்டிருப்பதை கண்டுள்ளேன். இப்பேர்பட்ட ஐக்கியம் நமக்கு ஆவிக்குரிய அழிவையே கொண்டுவரும். நாம் உலகத்தை விட்டு பிரிந்து போகமுடியாது என்றாலும், ஐக்கியங்கொள்ளும் விஷயத்தில் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் கெட்டுவிடாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இயேசு கிறிஸ்து, "....என் தாயார் யார்? என் சகோதர் யார்? என்று சொல்லி, தம்முடைய கையைத் தமது சீஷர்களுக்கு நேரே நீட்டி; இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே! பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்" (மத்.12:48-50). கிறிஸ்தவர்களோடு நம் ஐக்கியம் இருக்கும்போது நாம் தேவனுக்கேற்றவைகளை சிந்திக்கிறோம். சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லி நம் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணுகிறோம். கிறிஸ்துவுக்குள் ஆறுதலும் தேறுதலும் அடைகிறோம். உலகத்தின் அழிவிலிருந்து நாமும் நம்முடைய குடும்பத்தாரும் காக்கப்படும்படி நாளுக்கு நாள் கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருகிறோம். ஆகவே நம்முடைய ஐக்கியம் கிறிஸ்தவர்களோடு இருக்கட்டும்.

கடைசியாக, நம்முடைய சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி நம்முடைய ஐக்கியம் பிதாவாகிய தேவனோடும், குமாரனாகிய கிறிஸ்துவோடும், தேவஆவியோடும், கிறிஸ்த்வர்களோடும் இருப்பதாக! ஆமென்.

# ஊழியம் இம்மைக்கு அல்ல மறுமைக்கு

## Work Is Not For The World, But For The Heaven

*Bro. Yovan, Preacher*



கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள தேவனின் பணி செய்யும் சகோதரர்களே இரட்சகர் கிறிஸ்துவின் நாமத்தில் இந்த செய்தியின் மூலம் உங்களை சந்திப்பதற்காக பரலோக தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன். வேதாகமத்தில் அப்.பவுல் எழுதும்போது 1தீமோ.1:12-ல் "என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன்" என்கிறார். ஆம், நம்மையும் உண்மையுள்ளவர்கள் என்று தான் அழைத்துள்ளார். அவருடைய நாமத்தை மகிமைபடுத்துவதற்கு பிதாவாகிய தேவன் நம்மை ஊழியத்திற்கு அழைப்பதற்கு முன்பு நாம் தூஷிக்கிறர்களாகவும், துன்பப்படுத்துகிறர்களாகவும், கொடுமை செய்கிறர்களாகவும், இருந்திருப்போம். 1தீமோ.1:13-ம் வசனபடி இதற்கு காரணம் நம்முடைய அவிசுவாசத்தினால் அப்படி செய்திருந்தோம். இருப்பினும் தேவனால் இரக்கம் பெற்றோம். எப்படியென்றால் அப்.பவுல் எபேசி1:4-ல் சொல்லும்போது தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமா யிருப்பதற்கு அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மை தெரிந்து கொண்டபடியே என காண்கிறோம். அவர் தெரிந்து கொண்ட நோக்கம் திருவசனத்தை சத்தியத்தின்படி பிரசங்கிக்கவும், உபதேசிக்கவும், மற்றவர்களுக்கு கிறிஸ்துவின் சிந்தையோடு புத்தி சொல்லவுமே (2தீமோ.4:2).

தேவனின் ஆரோக்கியமான உபதேசமாக நாம் இருக்கவேண்டும். நாம் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை முதலாவது நன்றாய் பற்றிக்கொண்டு, சத்தியத்திற்கு விரோதமாய் மற்றவர்களின் மனதை மயக்கும் கள்ள உபதேசத்திலிருந்து நம்முடைய ஆத்துமாக்களைக்காக்கவேண்டும் என்று அப்.பவுல் தீத்து 1.-ம் அதிகாரத்தில் புத்தி சொல்கிறார். சகோதரர்களே, ஆத்துமாக்களை நீங்களும் நானும் காக்கவேண்டுமானால் நம்முடைய ஊழியத்தில் மாம்சசிந்தைக்கு இடம் கொடுக்கக்கூடாது என்று வேதம் போதிக்கிறது. ஏனென்றால், சுயாதீனமான அழைப்பில் இது கிறிஸ்துவின் அன்புக்குரிய ஊழியம் (கலா.5:13). ஆனால் இன்றைக்கு அநேகர் உண்மையான ராஜ்யத்தின் சுவிசேஷத்தை தன் சிந்தைக்கு மாற்றிவிடுகிறார்கள். கிறிஸ்துவின் உபசேதத்திற்கு புறம்பாக வேறொரு அதாவது மனிதருடைய கற்பனையின் உபதேசத்திற்கு கடந்து போவோமானால் எல்லா மனிதர்களை விட நாம் பரிதபிக்கப்பட்டவர்களாவோம். ஆகையால், 2தெச.3:6-ல் சொல்லப்பட்டபடி ஒழுங்கற்று நடக்கிற எந்த சகோதரர்களையும் விட்டு விலக வேண்டும். எனக்குத் தெரிந்து ஒரு ஊழியர். அவரிடம் யாரெல்லாம் புதிய உபதேசம் சொல்கிறார்களோ, அதை அவர் ஏற்று பணம் பெற்றுக்கொண்டு, உடனே கிராமத்தை தேர்வு செய்வார். பின்பு பெயர்

பலகையை எழுதிவைப்பார். இப்படியே இதுவரை 15 பெயர் பலகை வைத்து அந்தந்த சபைக்கு ஊழியராக கடந்து சென்று இருக்கிறார். அவரிடம் நான் கேட்டதற்கு உண்மையான சபையில் எந்த வித சீர நன்மையும் கிடையாது. ஆனால் மற்ற சபைகளில் நல்ல பணம் கொடுக்கிறார்கள். எங்கு சென்றாலும் கிறிஸ்துவின் நாமத்தைத்தானே சொல்லுகிறோம், நீங்களும் வந்து எங்களோடு சேர்ந்து கொள்ளுங்கள் என்றார். உடனே நான் 1கொரி.15:19-ல் சொல்லப்பட்டுள்ள வசனத்தை எடுத்துக் காண்பித்தேன் "இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை யுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்". மேலும், பவுல் சொல்வதைப்போல "நான் மனுஷரையா தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் kD õ i u¥ ãÇa¥gL¤J»wt d hÆU ªjhš ehk **கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே**" என்கிறார் பவுல் (கலா.1:10). நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனாகவே இருக்க விரும்புகிறேன் என்று அவரிடம் சொன்னேன். பவுலைப்போல நான் இயேசுவின் இரத்தினால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவன் மனுஷருக்கு அடிமையாக மாட்டேன். 1கொரி.7:23-ல் "நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள்" என்கிறார் பவுல்.

என் அன்பு சகோதரரே, நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர் நாமும் உண்மையுள்ளவர்களாய் இருந்து 2தீமோ.3:14-ல் சொல்லப்பட்டபடி கற்றுக்கொண்ட சத்தியத்தில் நிலைத்திருந்து தேவபக்தியின் வேஷம் தரித்த சகோதரர்களை விட்டுவிலகவும், இம்மைக்குரிய வாழ்க்கையை மட்டும் கருத்தில் கொண்டு ஊழியம் செய்யாமல் மறுமைக்குரிய அதாவது ஜீவனுக்குரிய வாழ்க்கையை குறிக்கோளாகக் கொண்டு ரோம.12:13-ன்படி பரிசுத்தவான்களின் குறைவுகளில் உதவி செய்கிறவர்களாக அநேகரை எழுப்பவேண்டும். ஆனால் இன்றைக்கு ரோம.8:-ம் அதிகாரத்தின் படி அநேக ஊழியர்கள் மாம்ச சிந்தைகொண்டு சுய உணர்வோடு ரோம.16:18-ல் பவுல் சொல்வதைப்போல வயிற்று பிழைப்புக்காக சிலர் இன்றுவரை ஊழியம் செய்துவருகின்றனர். லூக்.16 -அதிகாரத்தில் கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்தில் அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான் என்கிறார். ஆகையால், நாம் என்ன செய்யவேண்டும். கலா.1:6-ன்படி கள்ள உபதேசத்தை பற்றிகொள்ளாமல் 2யோவான் 9:10-ன்படி கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்து, லூக்12:47 எஜமானாகிய இயேசுகிறிஸ்துவின் சித்தத்தை அறிந்து, லூக்.19:10-ன் படி இழந்து போன ஆத்துமாக்களை இரட்சிப்பின் பாதைக்கு கொண்டு வந்து, ஐந்து தாலந்து உடையவன் பத்து தாலந்தாக மாற்றியது போல அநேக ஆத்துமாக்களை அறுவடைசெய்து, லூக்.19:17-ன்படி உத்தம ஊழியக்காரனே என்று இயேசுவால் அழைக்கப்பட்டு, யோவான் 6:27 அழிந்துபோகிற போஜன வாழ்விற்கு ஊழியம் செய்யாமல், நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காக ஊழியம் செய்வோம். எனவே சகோதரர்களே! எங்கள் சுவிசேஷம் வசனத்தோடு மட்டுமல்ல

உண்மையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் இருக்கிறது. 1கொரி.4:20-ல் "தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது". தேவனுடைய ராஜ்யத்திற்கு ஆத்தும ஆதாய பணி செய்து மற்றவர்களுக்கு போதிக்கிற நாம், நம் சரிரத்தின் செயலை அழித்து, ஆவிக்குரிய வேதத்தை ஆராய்ந்து நித்திய ஜீவனுக்குரிய பாதையை மற்வர்களுக்கு காட்டவே கிறிஸ்து இயேசு நம்மை ஊழியக்காரராக தெரிந்து கொண்டார். கிறிஸ்துவின் உபதேசத்தின்படி நீங்களும் நானும், இம்மைக்குரிய வாழ்க்கைக்காக ஊழியம் செய்யாமல் மறுமை அதாவது நித்தியஜீவனின் வாழ்க்கைக்காக செய்து நீங்களும், ஜீவகிரீடத்தை பெறுதே தேவனுடைய அநாதி திட்டம். அவரின் திட்டம் தொடர்ந்து உங்கள் வாழ்வில் செயல்பட ஜெபித்துக்கொள்கிறேன். இயேசுகிறிஸ்துவின் கிருபையும் தேவனுடைய அன்பும் பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் உங்கள் ஊழியத்தில் இருப்பதாக ஆமென்.

## நடப்புச் செய்திகள்

- ★ பூலத்தூர் மலைகிராமங்களில் உண்ணிகுச்சி செடிகளில் இருந்து பர்னிச்சர் தயாரிப்பு.
- ★ இலங்கை முகாமில் உணவு, மருந்துக்கு தட்டுப்பாடு தப்பிவந்த அகதிகள் தகவல்.
- ★ இந்தியாவில் முதல் முறையாக உள்நாட்டு தொழில் நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட 'ஐ.என்.எஸ்.அரிஹந்த்' நீர்மூழ்கி கப்பலை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- ★ விண்வெளிக்கு விமானத்தின் மூலம் செல்ல புதிய முயற்சி -அமெரிக்கா.
- ★ வருமானவரித் தாக்கல் செய்தோர் எண்ணிக்கை 5 லட்சத்தை தாண்டியது.

'கிறிஸ்துவின் வசனம்' மாத இதழை பெற்றுக்கொள்ள உங்களுடைய முழு முகவரியுடன் ஒரு அஞ்சல் அட்டையில் எழுதி இன்றே அனுப்பி வையுங்கள்.

-ஆசிரியர்


### வேத அறிவுப்போட்டி எண் 107 -ல் வெற்றி பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| G. பூங்கோதை | -வெ.பாளையம் | R. அருண்குமார் | -பிடாரியூர் |
| N. ஜான் செல்லையா | -மதுரை | R. பவுல் சாமுவேல் | -பிடாரியூர் |
| Mrs. மரகதம் திரவியம் | -கோம்பை | K.M.ஜான் | - |
| K. தங்கவேல் | -பாண்டி | ஜெ.கொண்டம் | |
| A. ஆனந்த | -மதுரை | K. ஜான் ஆபிரகாம் | -கீழப்பாதை |
| J. ஐசக் | -வ.போட்டை | V. கோவலன் | -மதுரை |
| J. நிர்மலா ஜான் | -மதுரை | K. மோகன் | -கொ.பாளை |
| J. பேசில் தேவசகாயம் | - மதுரை | N. கமலவேணி | -சென்னை |

# சபை சரித்திரத்தின் ஒரு கண்ணோட்டம்

விரிவுரை - 4

*Bro.Daniel Durairajan,Preacher*



**நாமகரண கூட்டத்தின் பாவம்**

**முன்னுரை:**

1. அமெரிக்க தேசத்தில் மட்டும் ஏறக்குறைய 2,054 பிரிவு சபைகளும் ஆயிரத்துக்கு மேற்பட்ட சபைகள் உலகமெங்கிலும் காணப்படுகின்றன.

2. நாமகரணக் கூட்டமென்றால் என்ன?

a. ஒரு மத பிரிவு கூட்டத்தார் இவர்களுக்கு வித்தியாசமான பெயர்கள் உண்டு. மற்ற மதக் கூட்டத்தாரை விட்டு வேறுபட்டிருப்பார்கள்.

b. முழு சபையினர் என்று தங்களை அழைத்துக் கொள்ள முடியாது சபையின் ஒரு பிரிவினர் அல்லது பிரிவு கூட்டத்தார்.

3. எல்லா நாமகரண கூட்டத்தாரும் தங்களைப் பற்றி சொல்லும்போது, நாங்கள் "சபை பாகுபாடற்றவர்கள்" எந்த பிரிவு கூட்டத்தையும் சேர்ந்தவர்களல்ல என்று தங்களை சொல்லிக் கொள்வார்கள் (or) அழைத்துக் கொள்வார்கள்.

4. உண்மையான, எந்த நாமகரண கூட்டத்தாரையும் சேராத மெய்யான சபை, கர்த்தருடைய சபை மட்டுமே, இரட்சிக்கப்பட்டவர்களடங்கிய கூட்டம், நாமகரண கூட்டத்தார் உலகில் தோன்றுவதற்கு முன்பே வேதாகமத்தில் இந்த மெய்யான சபையைப் பற்றி வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது.

**திறனாய்வு:**

I. வேத வாக்கியங்கள் நாமகரண கூட்டத்தாருக்கு உதவியாயிருக்கிறதா?

a. "இந்த தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு" (யோவான் 10:16)

1. இது புறஜாதிகளைப் பற்றி கூறுகிறது.

2. அப்பொழுது ஒரே "மந்தையும்" ஒரே "மேய்ப்பனுமாகும்".

b. "நாமகரணக் கூட்டங்களெல்லாம், திராட்ச செடியிலுள்ள கொடிகளல்ல" (யோவான் 15:1-7).

1. கிறிஸ்து இங்கு சீஷர்களைப்பற்றி பேசிக் கொண்டிருந்தார் நாமகரணக் கூட்டத்தாரைப் பற்றியல்ல.

2. இங்கு தனிப்பட்ட முறையில், ஒப்பிட்டு பேசுகிறார்.

c. நாமகரண கூட்டத்தாரெல்லாம், சரீரமான சபையின் வெவ்வேறு அங்கங்கள்" (1கொரி.12:12-27).

1. ஒவ்வொரு அங்கத்தினர்களைப் பற்றிதான் வசனம் தெளிவாக பேசுகிறது.

2. இந்த வசனப் பகுதி, ஒருமைப்பாட்டை பற்றி வலியுறுத்துகிறது பிரிவினையையல்ல.

II வசனமானது நாமகரண கூட்டத்தாரை, கண்டனம் செய்கிறது.

a. 'மனித' பெயர்களை சூட்டிக் கொள்வது தவறு 1கொரி.1:10-13.

b. "காட்சிகள்", "பிரிவினைகள்", "மார்க்க பேதங்கள்" இவைகளெல்லாம் மாம்சத்தின் கிரியைகளாகும் கலா.5:19-21.

c. "கர்த்தருடைய சபை" என்று அழைத்துக் கொள்வதால் இது மார்க்கபேதமாகிவிடாது அப்.24:5,14.

III. ஒரு நாமகரண கூட்டத்தில் அங்கத்தினராக இல்லாமல் ஒரு சிறந்த கிறிஸ்தவனாக இருக்க முடியுமா?

a. கண்டிப்பாக இருக்க முடியும். ஆரம்ப கால கிறிஸ்தவர்கள் அப்படிதான் இருந்தார்கள் அப்.2:47.

b. "எத்தியோப்பிய மந்திரி" எந்த சபையைச் சார்ந்தவர்? அப்.8:26-39.

c. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் பின்பற்றின நடைமுறைகளை ஒருவன் பின்பற்றினால் அவர்களைப்போலவே அவன் அந்த சபையின் கர்த்தரால் சேர்த்துக் கொள்ளப்படுவான்.

**முடிவுரை**

1. பரிசுத்த வேதாகமம் + மனித கோட்பாடுகள் ஒருவரை நாமகரண கூட்டத்து அங்கத்தினராக்கும்.

2. பரிசுத்த வேதாகமம் மட்டுமே, ஒருவரை கிறிஸ்தவனாக மட்டும் உருவாக்கும்.

3. பரிசுத்த வேதாகமத்திற்கு ஒருவர் கீழ்ப்படிந்தால், அவர்களை கிறிஸ்தவர்களாக மட்டும் மாற்றும், கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினராக்கும்.

**ஜெபியுங்கள்**



- ✧ மாதந்தோறும் நடைபெற்று வரும் ஊழியர் கூட்டங்களுக்காக...
- ✧ செப்டம்பர் மாதம் World Evangelism நடத்தும் மூன்று நாள் Kodaikanal Retreat-க்காக ஜெபியுங்கள்...
- ✧ கர்த்தருடைய ஊழியத்திற்கு தடையாக இருக்கும் ஜனங்கள் மனந்திரும்ப...
- ✧ இவ்வூழியத்தை தாங்கும் குடும்பங்களுக்காக...
- ✧ கடந்த மாதம் ஜெபக்கூட்டத்தில் ஏறெடுக்கப்பட்ட ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுத்தபடியால்...

# நமக்குள்ளிருந்து நம்மை வெளிப்படுத்துவது...

***Bro.K.Ramraj**, Preacher*



மத்.12:34-37 மனுஷர் பேசும் வார்த்தைகள் நம்முடைய எண்ணங்களை பிரதிபலிப்பதாக இருக்கிறது.

ஆதி.1:1-3 யோவா.1:1-3 வார்த்தை (இயேசுகிறிஸ்து) யின் மூலமாகவே தேவன் உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கினார்.

மத்.4:4 வார்த்தை நம்மை பிழைப்பூட்டுவதாக இருக்கிறது.

யாக்.3:2 சொல் தவறாதவன் பூரண புருஷன் என்று வேதம் சொல்கிறது.

தேவன் ஆபிரகாமின் சந்ததிக்கு கானான் தேசத்தை கொடுப்பேன் என்று வாக்குக் கொடுத்திருந்தார் (ஆதி.15:13-21).

அவருடைய வார்த்தை நிறைவேறும் காலம் வந்தது. 430 வருஷமாய் எகிப்திலே அடிமைகளாய் இருந்த இஸ்ரவேல் ஜனங்களை தேவன் மேசேயைக் கொண்டு மீட்டு கானான் தேசத்திற்கு அழைத்து வந்தார். அற்புதமாய் தேவன் அவர்களை போஷித்து பாதுகாத்து வழிநடத்தி வந்தார்.

கானான் தேசத்திற்கு போகுமுன் அதில் குடியிருக்கிற அந்நியரின் பலத்தையும் தேசத்தின் தன்மையையும் வேவு பார்த்து வரும்படி 12 பேரை அனுப்பினார்கள். அவர்கள் திரும்பி வந்து அந்த தேசம் பாலும் தேனும் ஓடுகிற தேசந்தான் ஆனால் அதில் குடியிருக்கிற ஜனங்கள் பலவான்களும் நெடியவர்களும் பட்டணங்கள் பெரியவைகளும், வானத்தையளாவும் மதிலுள்ளவைகளுமாய் இருக்கிறது, அவர்களால் நாம் மடிந்து போவோம் என்று சொன்னார்கள். அவர்களில் யோசுவாவும், காலேபும் மாத்திரம் நாங்கள் சுற்றிப் பார்த்த தேசம் மகா நல்ல தேசம் கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால் அத்தேசத்தை நமக்குக் கொடுப்பார் என்று சொன்னார்கள். அவர்களிடத்திலிருந்து வெளிப்பட்ட வார்த்தைகள் அவர்களின் அவிசுவாசத்தை வெளிப்படுத்தியது. விசுவாசத்தை வெளிப்படுத்தின யோசுவாவும், காலேபும் கானானுக்குள் பிரவேசித்தார்கள். முறுமுறுத்தவர்கள் மடிந்துபோனார்கள் (எண்.13:27-32; 14:1-8; உபா.1:31-38). ...குற்றமுண்டு குற்றமில்லையென அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள். (ரோ.2:15). எனவே நம்முடைய சிந்தனையை வெளிப்படுத்துவது வார்த்தைகள்.

இயேசுகிறிஸ்து கப்பர் நகூமில் ஊழியம் செய்தபோது, நூற்றுக்கு அதிபதி அவரிடத்தில் வந்து என் வேலைக்காரன் திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான் என்று வேண்டிக்கொண்டான். அதற்கு இயேசு: நான் வந்து அவனை சொஸ்தமாக்குவேன் என்றார். நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக ஆண்டவரே நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரனல்ல ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும் அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்றான் (மத்.8:5-9). அவனது வார்த்தைகள் இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்தியது. ஆண்டவர் இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு நீ விசுவாசித்தபடியே ஆகக்கடவது என்றார் அந்த நாளிகையில் அவன் வேலைக்காரன் சொஸ்தமானான் (மத்.8:10-13).

இயேசு மரித்த லாசருவை எழுப்புகிற விஷயத்தில் மரியாளின் வார்த்தைகளைக் கேட்டு ஆவியில் கலங்கி கண்ணீர் விட்டார் (யோவா.11:33-35).

நம்முடைய வார்த்தைகளே, நம்முடைய இருதயத்தின் நினைவுகளை வெளிப்படுத்துகிறது. அந்த வார்த்தைகளே நாம் தேவனுக்கு சந்தோஷத்தையும் துக்கத்தையும் கொடுக்கக்கூடியதாய் இருக்கிறது. உன் வாயின் வார்த்தைகளின்படி ஆசீர்வதிக்கப்படுவாய் என்று எழுதியிருக்கிறபடியால் நம்முடைய வாயின் வார்த்தைகள் நிதானமாய் இருக்கவேண்டும். உன் மாம்சத்தை பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே (பிர.5:6).

## வேத அறிவுப்போட்டி எண் 107 -ன் விடைகள்

*1. எசேக்கியா -எசே2:7*
*2. சுத்தவானாகக் -1தீமோ5:22*
*3. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ -தானி3:30*
*4. யூதர்கள் -1தெச2:16*
*5. திருப்தியடையாதிருப்பார்கள் - ஓசி.4:10*
*6.எல்லாமுமாயிருக்கிறார் - கொலோ3:11*
*7.உங்களை -ஆமோ3:2*
*8.மனுஷர் -பிலி2:7*
*9.மாலுமி -யோனா1:6*
*10.நீங்கக்கடவது -எபே4:31*

*மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும் லூக்.18:27*

**ஒரு வாசகியின் கடிதம்...**

*அன்புள்ள ஊழியக்காரர்களுக்கு உங்கள் வாசகி எழுதி கொள்வது உங்கள் மாத இதழ் இந்த மாதம் கிடைத்தது. எங்களுக்கு மிகவும் சந்தோஷமாகவும், எங்களுக்கு பிரயோஜனமாகவும் உள்ளது. இந்த இதழில் விசவாசம் என்றால் என்ன? என்பது பற்றி எங்களுக்கு கற்றுக் கொடுத்த உங்களுக்கு நன்றி. இன்னும் இதழ் மேலும் வளர எங்கள் வாழ்த்துக்கள். எங்கள் குடும்பத்திற்காக ஜெபிக்கும் படி உங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.*


*உங்கள் வாசகி: **G.Poongothai***

சரித்திர ஆய்வு

# சத்திய வார்த்தையில் சரித்திரம் -19

## பிரதான மேய்ப்பரின் கடைசி ஜெபம்

**Bro. John S.Nathan,** Gospel Minister
Christian City Church of Christ,
Minjur -601 203, S.INDIA.
Mobile: 94444 43378



1. **ஒரே** தேவன்
2. ஒரே கர்த்தர்
3. ஒரே அஸ்திபாரம்
4. ஒரே சுவிசேஷம்
5. ஒரே மந்தை
6. ஒரே சபை
7. ஒரே பலி

"இதோ, சகோதரர் **ஒருமித்து** வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது" சங்கீதம்133:1. ...நாம் **ஒருமித்து** அவர் நாமத்தை உயர்த்துவோமாக" சங்கீதம்34:3.

பாவமனிதன் தேவனை விட்டு விலகி செல்லுவதிலும், அவரை தேடாமல் தன் சுய் விருப்பத்துடன் செயல்பட்டுவந்தாலும், ஒரு சில தேவ மனிதர்கள் மட்டும் அவரை நாடி, தேடி வணங்கி ஒன்று கூடி வாழ்ந்துவந்தான். தேவனால் அழைக்கப்பட்டு, அனுப்பப்பட்டவர்கள் அனைவருமே இதே நோக்கத்துடன் வாழ்ந்து வந்ததுடன் அனைவருமே அப்படியே வாழ்ந்திட விரும்பினர், போதித்தனர், முன்மாதிரியாய் வாழ்ந்தனர்.

### ஒரே தேவன்

ஒன்றான (ஒரே) மெய்த்தேவனாகிய உம்மை" யோவா.17:3. "எல்லாருக்கும் **ஒரே** தேவனும் பிதாவும் உண்டு அவர் எல்லார் மேலும், எல்லாரோடும் உங்கள் **எல்லாருக்குள்ளும்** இருக்கிறார்" எபே.4:6. ....உன் **தேவனாகிய** கர்த்தர் நானே. **என்னையன்றி** உனக்கு வேறே **தேவர்கள்** உண்டாயிருக்க வேண்டாம்" யாத்.20:2-3. ...தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே (இயேசுகிறிஸ்து) மத்.19:17. .....உன் **தேவனாகிய** கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக மத்.22:32. லூக்.10:27. ....**தேவனாலேயன்றி** ஒரு அதிகாரமுமில்லை, உண்டாயிருக்கிற அதிகாரங்கள் **தேவனாலே** நியமிக்கப்பட்டிருக்கிறது" ரோம.13:1. "வானங்கள் **தேவனுடைய** மகிமையை வெளிப்படுத்துகிறது" சங்.19:1. ".....பரலோகத்தின் **தேவன்** உனக்கு ராஜரீகத்தையும் பராக்கிரமத்தையும் வல்லமையையும், மகிமையையும் அருளினார்" தானி.2:37,21. "...உன்னதமான **தேவன்** மனுஷரின் ராஜ்யத்தில் ஆளுகை செய்து, தமக்குச் **சித்தமானவனை** அதின்மேல் அதிகாரியாக்குகிறார்" தானி.5:21. பின்பு அவர் (சவுலை) அவனைத்தள்ளி தாவீதை அவர்களுக்கு

ராஜாவாக ஏற்படுத்தி, ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டேன்" என்றார் அப்.13:22.

பிள்ளைகளே, நீங்கள் **தேவனால்** உண்டாயிருந்து அவர்களை (பொல்லாங்கனை, உலகத்தை) ஜெயித்தீர்கள், ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர் 1யோவான் 4:4,8. **தேவனை** ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை, நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார், அவருடைய அன்பு நமக்குள் பூரணப்படும்" 1யோவான் 4:12.

"....நன்மை செய்கிறவன் **தேவனால்** உண்டாயிருக்கிறான்; தீமை செய்கிறவன் **தேவனைக்** காண்பதில்லை" 2யோவான்11. காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை **தேவத்துவம்** THEOCOTES என்பவைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, **உலகமுண்டானது முதற்கொண்டு,** தெளிவாய்க் காணப்படும்" ரோம.1:20.

மனித இனம் காணமுடியாத **தேவனை** தேடி அலைந்து இறுதியில் அவரை காணாததினால் தானே தனக்கு தேவனை பொன், வெள்ளி, செம்பு வெண்கலம், கல், மரம், மண்ணினால் உண்டாக்கி அனைவரின் விருப்பம்போல் அதனை தொழுது கொள்ள தொடங்கினர். ஆனால் **தேவனே** தன்னை பரிசுத்தமான, தெளிவான எளிய சுலபமான நிலைமையில் தன்னைத்தானே மனுஷனுக்கு வெளிப்படுத்தி தனது **தனித்தன்மையை** ஒப்புயர்வற்ற உன்னத நிலையை மனுஷனுக்கு தெளிவுபடுத்தினார். இதனை புரிந்துகொண்ட பின் இவை, தனது சாதனையாக எண்ணிவிடாமல் தேவனின் மாபெரும் ஈவாக எண்ணினான். தேவனின் இவ்வருட்கொடையை மற்றவர்களுக்கு அறிவிக்க மறந்துவிட்டான். ஆனால் இயற்கையோ அவரை மறக்காமல் இன்றும் செயல்பட்டுவருகிறது. "வானங்கள் **தேவனுடைய** மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது" சங்.19:1. பாவமனிதனால், பரிசுத்த தேவனை காணமுடியாது அவரின் அருமையான செயல்பாட்டினை, வெளிப்பாட்டினை ஒதுக்கி தள்ளியதுடன் அவருக்கு விரும்பாத, ஏற்றுக்கொள்ளாத, தடுத்துக்கூறின விக்கிரக வழிபாட்டினை கண்மூடித்தனமாக வழிபட தொடங்கினான். மற்றவர்களையும் தன்னைப்போலவே வழிபட வகைதேடினான். தேவனுடைய சாயலாயிருக்கிற **கிறிஸ்துவின்** மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் (உலகின் சாத்தான்) தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" 2கொரி.4:4.

மேலும், எபேசி.4:18-ல் "அவன் புத்தியில் அந்தகாரப்பட்டு, (குருடனானதினால்) தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து, வசனம் 19 உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களை காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுக்கிறார்கள்.

அப்பொழுது தனது மனதை கடினப்படுத்தி தங்களின் கொடிய துர்ச்செய்கைகளினால் தங்களைத்தாங்களே வருத்திக்கொண்டு, ஆத்துமாவை கெடுத்துக்கொண்டு அழிந்துதொழிகிறார்கள்.

ஆனால் தேவன் தாம் உண்டாக்கிய, தன்னால் தெரிந்து கொள்ளப்பட்டு அழைத்தவர்களான ஆதாம், ஆபிரகாம் முதற்கொண்டும், அப்போஸ்தலர்கள் வரையில் தமது வல்லமையான மேன்மையான இலவச இரட்சிப்பை வழங்கிட விரும்பினார். அநேக தீர்க்கதரிசிகளை தொடந்து உலகிற்கு அனுப்பி அவர்களின் பாவத்தை கண்டித்துணர்த்தியதோடல்லாமல் அவர்கள் அனைவரும் தம்மிடத்தில் திரும்பிவர வழிவகை செய்தார்கள் என்பதை எல்லா தீர்க்கதரிசிகளின் வாழ்வு கூறுகிறது. தேவன் பேசினவைகளை நாம் கேட்டு சிந்தித்தால் (தியானித்தால்) நாம் எல்லாருமே தெளிவு பெறலாம் அவரின் தணியாத அன்பு, கருணை, கிருபையின் அளவை எண்ணி, எண்ணி இன்புறலாம் (கொலோ.2:9). ஏனென்றால் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக **அவருக்குள்** வாசமாயிருக்கிறது (வசனம்10). மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் (நாம்) பரிபூரணமுள்ளவர் களாயிருக்கிறீர்கள்" தேவனின் திட்டத்தை ஏற்று இயேசுகிறிஸ்து நம்மை தேவனிடத்தில் சேர்த்திடும் **ஒப்புரவாக்குதலின்** இரட்சிப்பின் திட்டத்தை சிலுவையிலே தம்மை தியாக பலியாக ஒப்புக்கொடுத்து, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி வெற்றி சிறந்தார். அவரின் உயிர்த்தெழுதலின் பிரசன்னத்தினாலே தம்முடைய சீடர்களுக்கு தெரியப்படுத்தினார் (தெளிவுபடுத்தினார்). இவ்விதமாக ஆவியானவர் வேதவாக்கியங்களாலே தெளிவு படுத்தி அவரின் சத்தியத்தின் சாட்சியாக இரட்சிப்பை உறுதிபடுத்தி தேவனின் மக்களை தம் **சத்திய, ஜீவ வழி**யிலே வழி நடத்திட வழிவகை செய்தார். விசுவாசிகளின் மனந்திரும்புதலினால் தேவனை குறித்த அறிவடையவும், ஆவியானவரின் மூலம் உறுதியாய் காணக்கூடிய தேவனின் சகல ஈவுகளை பெற்று வெற்றிமேல் வெற்றி பெற்று சிறக்கலாம். தேவனின் (உண்மைதேவ) ஞானத்தையும் நன்கு அறியலாம். **முக்கிரியை**யினால் தேவன் வெளிப்படுத்தும் இரட்சிப்பின் நடபடிகள், தேவனைப்பற்றிய அவரின் பரவசமளிக்கும் உயிர்த்தெழுதலின் சாட்சியினால், அவரின் குணத்தினால் **பிதா, குமாரன், பரிசுத்த ஆவி**யானவரின் (இம் மூவரின்) ஐக்கியத்தை அறிகிறோம். பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர். பிதா குமாரனாகிய வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம் **மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்** 1யோவா.5:8.

அவர்களுடன் நாமும் ஒன்றாயிருக்க விரும்புவது நமக்கு நல்லதே. (தேவனே) ஆண்டவரே, நீர் உண்டாக்கின (எல்லா மக்களும்) ஜாதிகளும் வந்து, உமக்கு முன்பாக பணிந்து உமது நாமத்தை மகிமைப்படுத்துவார்கள் தேவரீர் மகத்துவமுள்ளவரும் அதிசயங்களை செய்கிறவருமாயிருக்கிறீர் நீர் ஒருவரே **ஒன்றான மெய் தேவன்**" யோவான் 17:3. உலகிலே இவரைப்போல ஒருவரும் மெய்த்தேவன் என்று கூறிடவில்லை, ஏனெனில் இருந்திருந்தால் கூறி இருப்பார்களே!

# ஞானதிஷ்டிக்காரன்

சிறுவர் பகுதி



**வேத பகுதி :**
**1சாமுவேல் 9:6-13**

ஞானதிஷ்டிக்காரன் என்றால் யார் என்று உங்களுக்கு தெரியுமா? தீர்க்கதரிசிகளே முற்காலத்தில் ஞானதிஷ்டிக்காரன் என்று அழைக்கப்பட்டனர். சவுலும் அவனுடைய வேலைக்காரனும் தன்னுடைய தகப்பனின் கழுதையைத் தேடிப் போனார்கள். பல நாடுகளில் தேடியும் கழுதை காணப்படவில்லை சூப் என்னும் நாட்டிற்கு வந்தபோது வேலைக்காரன் இதோ, இந்தப் பட்டணத்திலே தேவனுடைய மனுஷன் ஒருவர் இருக்கிறார்; அவர் பெரியவர்; அவர் சொல்லுகிறதெல்லாம் தப்பாமல் நடக்கும்; அங்கே போவோம்; ஒரு வேளை அவர் நாம் போக வேண்டிய நம்முடைய வழியை நமக்குத் தெரிவிப்பார் என்றான்.

அப்பொழுது சவுல் தன் வேலைக்காரனைப் பார்த்து; நாம் போனாலும் அந்த மனுஷனுக்கு என்னத்தைக் கொண்டுபோவோம்; நம்முடைய பைகளில் இருந்த தின்பண்டங்கள் செலவழிந்து போயிற்று; தேவனுடைய மனுஷனாகிய அவருக்குக் கொண்டு போகத்தக்க காணிக்கை நம்மிடத்தில் ஒன்றும் இல்லையே என்றான். அதற்கு அந்த வேலைக்காரன் என்ன சொன்னான் தெரியுமா? இதோ, என் கையில் இன்னும் கால் சேக்கல் வெள்ளியிருக்கிறது; தேவனுடைய மனுஷன் நமக்கு நம்முடைய வழியை அறிவிக்கும்படிக்கு, அதை அவருக்குக் கொடுப்பேன் என்றான்.

அன்பான தம்பி தங்கைகளே கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும் என்ற வசனத்தின்படி வெறுங்கையாக தேவ மனிதனை சந்திக்க விருப்பமில்லாது, யோசனை செய்து தன்னிடத்திலிருந்த விலையேறப்பெற்ற கால்சேக்கல் வெள்ளியை ஞானதிஷ்டிக்காரனாகிய சாமுவேலுக்குக் கொடுக்க முன்வந்த அந்த வேலைக்காரனை சற்று யோசித்துப்பாருங்கள். நீங்கள் உங்கள் சபை போதகரை சந்திக்கும்போது வெறுங்கையோடே செல்கிறீர்களா? அல்லது அவர் நமக்கு ஏதாவது கொடுப்பார் என்ற ஏக்கத்தோடு செல்கிறீர்களா? தேவ மனிதன் தேவனுடைய வார்த்தைகளையே கொடுப்பான். நீங்கள்தான் பொருட்களினால் அவர்களை கனப்படுத்தவேண்டும். இதற்கு சவுலும் அவன் வேலைக்காரனும் நமக்கு நல்ல முன்மாதிரி. புதிய ஏற்பாட்டிலும் அநேகர் பவுல் போன்றோரை தங்கள் பொருட்களினால் கனப்படுத்தியதை நாம் வாசிக்கின்றோம்.

**மனப்பாட வசனம்**

**"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்"**
**( லூக்கா6:38 )**

# வேத அறிவுப் போட்டி எண்.108

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்

1. கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடைக்காத பஞ்சத்தை அனுப்புவேன் என்று எந்த தீர்க்கதரிசியின் மூலம் கர்த்தராகிய ஆண்டவர் சொன்னார்?
2. பவுலை தேவதூதனைப்போலவும், கிறிஸ்து இயேசுவைப்போலவும், ஏற்றுக்கொண்ட சபையார் யார்?
3. அநியாயத்தை உழுதீர்கள், தீவினையை அறுத்தீர்கள்; பொய்யின் கனிகளைப் புசித்தீர்கள்; உங்கள் வழியையும் உங்கள் பராக்கிரமசாலிகளின் திரளையும் நம்பினீர்கள் என்று எந்த தீர்க்கன் மூலம் கர்த்தர் பேசினார்?
4. நான் நிருபங்களாலே உங்களைப் பயமுறுத்துகிறவனாய்த் தோன்றாதபடிக்கு இதைச் சொல்லுகிறேன் என்ற அப்போஸ்தலன் யார்?
5. எந்த ராஜா தீர்க்கதரிசிக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து, அவனை வணங்கி, அவனுக்கு காணிக்கை செலுத்தவும் தூபங்காட்டவும் கட்டளையிட்டான்?
6. ஜென்மசரீரம் விதைக்கப்படும், எப்படிப்பட்ட சரீரம் எழுந்திருக்கும்?
7. அகோலாள் என்பதற்கும், அகோலிபாள் என்பதற்கும் என்ன பொருள்?
8. நீதிப்பிரமாணத்தைத் தேடின இஸ்ரவேலர் நீதிப்பிரமாணத்தை அடைத்தார்களா?
9. நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு என்ன இல்லை?
10. யாருடைய தகப்பன் கிரேக்கன், தாய் யூதஸ்திரீ?

**Website: www.thewordofchristindia.com**

**“நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்”**
**2கொரிந்தியர் 5:6**

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu - 624 202 and printed by R.Sathiyamoorthy at Bharathi Press14/13/24 melamanthai street, Batlagundu - 624 202.
Editor: B.Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2009-2011
Posted
at Batlagundu Post Office
on 10th Aug.2009.

BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
e-mail: thewordofchrist@sancharnet.in

ஆராதனை நேரம் ஞாயிறு காலை 8.30 மணி
தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள
யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்

உங்கள் வானொலியில்

இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு
சனி கிழமை மாலை 5.30 முதல் 5.45 மணி வரை கேளுங்கள் மேலும்

உங்கள் தொலைக்காட்சியில்
TAMILAN TV - Every Monday 6.00 - 6.15 a.m
IMAYAM TV - Every Wednesday 6.30 - 6.45 a.m

மாத இதழ் மற்றும் வேதபாடம்
தேவைக்கு உடனே ரூ.15/-
அனுப்பி பெற்றுக்கொள்ளவும்

டிவி மற்றும் ரேடியோவில் வெளி வந்த
தேவ செய்திகள் அடங்கிய சிடி மற்றும்
டிவிடிக்கள் தேவைப்படுவோர் ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளவும்

அனைத்து
தொடர்புக்கும்

Monthly Magazine

To

*If undelivered please return to:*
From

Editor
THE WORD OF CHRIST
P.O.Box-5
Batlagundu - 624 202
S.INDIA.